திரு. முனு ஆதி : கிழக்குத் தாம்பரப் பகுதியில் ஏறக்குறைய 15,000 மக்கள் வசிக்கிறார்கள். இங்கே அரசியல் அலுவலகங்களில் வேலை செய்கிற அதிகாரிகளும் குடியிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் இந்தப் பகுதியில் பெரிய திருட்டுகள் நடந்திருக்கின்றன. அதனால் மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். ஊராட்சி மன்றத்தின் மூலம் இது சம்பந்தமாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இனிமேலாவது அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷனை ஏற்படுத்த அரசினருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாம்பரத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. பல்லாவரத்திலும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. தாம்பரத்தில் இன்னொரு போலீஸ் ஸ்டேஷன் வைக்கப்பட வேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணரவில்லை. ஆனால், 'குரோம்பெட்'-ல் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வைக்கலாம் என்ற ஆலோசனை இருந்தது. அது கூட இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

Police stations for Kanyakumari district

* 322 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to open additional police stations in the Kanyakumari district during 1962; and if so, at which places?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The proposals for the reorganization of Kanyakumari district Police as finalised include the following :—

(i) Bifurcation of Kottar Police station into two Law and Order Stations (Kottar and Vadasery).

(ii) Opening of Crime Police station and Traffic Police Station at Nagercoil; and

(iii) Conversion of the outposts at Cape Comorin, Colachel, Manavalakurichi, Rajakkamangalam, Arumana, Kulasekaram, Puthukada and Kollencode into Police stations.

SRI M. WILLIAM : Sir, in view of the fact that there is only one Police Station in Vilavancode taluk and the jurisdiction of the Police station comprises two lakhs of people, will the Government be pleased to start at least three or four additional charging centres?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : When a decision is taken on the re-organisation proposals, all these aspects will be taken into consideration by the Government.

Eradication of corruption

* 323 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state what new steps Government intend taking for eradicating of corruption among the officers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The State Government have been taking firm steps to put down and punish corruption. Recently the Government of India consulted us on proposals

16th July 1962]

for effecting certain changes in the Law and improvements in procedure indicated as desirable in the light of experience. The final conclusions of the Government of India are awaited.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தெரிந்தெடுக்கப்பட்ட சிலரிடத்தில் நம்பிக்கை வைத்து, அவர்களுடைய ரகசிய ரிப்போர்ட்டின்பேரில், தவறுக்கு உட்பட்ட அதிகாரிகள் என்று கண்டால், அவர்களை கம்பல்ஸரியாக ரிடையர் செய்யக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்துவார்களா ? இதற்காக அவசியமிருந்தால், ஸர்வீஸ் ரூலை திருத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ? இதையும் அரசாங்கம் ஒரு ஆலோசனையாக ஏற்றுக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது இருக்கிற சட்டத்திற்கு உட்பட்டும், மாற்றி அமைக்கிற சட்டத்திற்கு உட்பட்டும்தான் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : சமீப காலத்தில் அதிகாரிகள் மத்தியிலே இருக்கிற லஞ்ச ஊழல் ஏறுமுகமாக இருக்கிறதா அல்லது இறங்குமுகமாக இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரொம்பவும் இறங்கு முகமாக இருக்கிறது. பெரும்பாலும் கீழே இருப்பவர்களிடத்தில்தான் லஞ்சப் புகார் வருகிறது. அதையும் அடியோடு அகற்ற அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

திரு. முனு ஆதி : லஞ்சம் என்பது பொருளாகக் கொடுப்பதையும் குறிக்குமா ? அல்லது பணம் கொடுப்பதை மட்டும் தான் குறிக்குமா ? அந்த அடிப்படையில் சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது நான் லஞ்சம் என்பதற்கு சட்ட பூர்வமான விளக்கம் கூறமுடியாது. ஆனால், பணமாகக் கொடுத்தால் தான் லஞ்சம் என்று ஒன்றுமில்லை. வேறு எந்த வகையில் இருந்தாலும், லஞ்சம் என்ற புகாரின் கீழே எல்லாம் வரும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அரசாங்க சிப்பந்திகள் தாங்கள் பெறுகிற ஊதியத்தைக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை சரிவர நடத்த முடியவில்லை என்ற காரணத்தினால், நிர்பந்தத்தின் காரணமாக, இத்தகைய கெட்ட செயலில் ஈடுபடுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், அவர்களுடைய வாழ்க்கையை சரிவர நடத்துவதற்கு மேலும் அவர்களுக்கு சம்பளச் சலுகை அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. சிறியவர்களாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும், குறைந்த வருமானம் உடையவர்களாக இருந்தாலும், அதிக வருமானம் உடையவர்களாக இருந்தாலும், வருமானமே இல்லாமல் வறுமையிலே வாடுகிறவர்களாக இருந்தாலும், நாணயம் என்பது ஒன்று உண்டு. ஒவ்வொருவருக்கும் இருக்கிற நாணயத்தைப் பொறுத்திருக்கிறது அவருடைய போக்கு.

திரு. எம். எஸ். செல்வராஜன் : லஞ்சக் குற்றம் என்பது வாங்குபவர்களை மாத்திரம் சாரும் என்றில்லாமல், கொடுப்பதும் குற்றம் என்று அரசாங்கம் கொள்ளுமா ? அதை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொடுப்பதும் குற்றம் என்று இருப்பதினால் தான், கொடுக்கிறவர்கள் முன்வருவதில்லை அதை ஒப்புக்கொள்ளுவதற்கு.

திரு. கோ. சி. மணி : கிராமங்களிலே இருக்கிற கிராம உத்தியோகஸ்தர்கள், அல்லது பட்டாமணியக்காரர்கள், கர்ணம் போன்றவர்கள் அறுவடை காலத்திலே, மாமூல் என்ற பெயரால், நெல்லாக பெறுகிறார்களே ? அதுவும் லஞ்சத்தில் தான் அடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "மாமூல்" என்ற வார்த்தை தமிழ் வார்த்தை அல்ல. அது ரொம்ப நாட்களாக ஏற்பட்டது. அந்தக் காலத்திலிருந்தே வந்து விட்டது. அதுவும் லஞ்சம்தான். ஆனால், இதையெல்லாம் அகற்றவேண்டுமென்றால் பொது மக்களுக்கு உயர்ந்த விழிப்பு இருக்கவேண்டும். அவர்களும் கண்டிப்பாக இருக்க வேண்டும். இதே மாதிரி மாமூல் கேட்பதாக இருந்தால், அதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்யவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எந்தெந்த இலாகாக்களில் லஞ்சம் அதிகமாக இருக்கிறது என்ற விவரங்கள் கூறமுடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் இது பற்றி தனியாகக் கேள்வி போட்டால், நான் விவரங்களைப் பார்த்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். மணி : கிராம முன்சீப்களிடமிருந்து ஏதாவது நற்சாட்சிப் பத்திரம் பெறவேண்டுமென்றால், அதற்காக ரூ. 2 கட்டணம் கொடுத்தால்தான் தருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எங்களுக்குத் தெரியாது. ஏதாவது குறிப்பாக அம்மாதிரி நடைபெற்றது பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால், அதற்கு மேலே என்னென்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியுமோ அதையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம்.

Yarn

* 324 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken to reduce the price of yarn supplied to weavers?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[a] is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரைக்கும், பெரும்பாலும் தேவையாக இருக்கக்கூடிய சன்னரக நூல், 60-ம் நம்பருக்கு மேற்பட்ட நூல்கள் நியாயமான விலையில் கிடைப்பதில்லை. ஸ்டேட் சொஸைடிகளுக்குக் கிடைப்பது கூட மிகக் குறைவு. கூட்டுறவு சொஸைடிகளுக்குத் தேவைப்படும் நூல் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு கோவையில் ஒரு கூட்டம் நடத்தினோம். மில் அதிபர்கள், மில் நூலில் வியாபாரம் செய்கிறவர்கள், அதே போல கைத்தறி நெசவாளர் பிரதிநிதி, கூட்டுறவுச் சங்கத் தலைவர் எல்லோரும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. 60-வது நம்பருக்கு மேற்பட்ட நூல்களையெல்லாம் "எக்ஸ் மில் பிரைஸ்" அவர்களுக்கு என்ன விலையில் கொடுக்கிறார்களோ, அதே விலைக்கு கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுக்கு வெளியே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு, "எக்ஸ் மில் பிரைஸ்" "ப்ளஸ்" "ஒன் பெர்ஸண்ட்" விலை போட்டு, ஹாண்டு லூம் டைரக்டர் எந்தெந்த சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்துகொண்டு ஒழுங்காக நூல் விநியோகம் செய்கிறார்கள் என்று

---

[a] Printed as Appendix I on pages 89